முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்

அசல் வழக்கு எண். 185/2020

இன்று 2025 ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 15 ம் நாள் இன்று இந்த பி.வா.சா.1 ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.A.வனிதா, M.S.W., L.L.B., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பாலசுப்பிரமணியம் | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : ராஜமாணிக்கம் | கிராமம் | : பொங்குபாளையம் |
| வயது | : 58 | தாலூக்கா | : திருப்பூர் |
| நாள் | : 15-10-2025 | மாவட்டம் | : திருப்பூர் |

**சாட்சி மீண்டும் முன்னிலையாகி சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு 4ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1. நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை வாக்குமூலத்தை நான் எங்கு வைத்து தயார் செய்தேன் என்றால் வழக்கறிஞர் அலுவலகத்தில் வைத்து தயார் செய்தேன். எந்த வழக்கறிஞர் அலுவலகம் என்றால் டக்கென்று ஞாபகம் வரவில்லை. வாதியை நான் குறுக்கு விசாரணை எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். தாவாச் சொத்து எத்தனை விஸ்தீரணம் என்றால் மொத்தம் 5 செண்ட் ஆகும். தாவா தாக்கல் செய்த 2020ம் ஆண்டு அந்த இடத்தில் தார்சு கட்டிடம் இருந்தது என்றால் சரிதான். தாவா தாக்கல் செய்த 2020ம் ஆண்டு அந்த 5 செண்ட் இடம், தார்சு கட்டிடம் ஆகியவை ரூ.15 லட்சம் பெறும் என்றால் சரிதான்.

2. நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன் என்றால் முன்பு செய்து வந்தேன் தற்போது அந்த தொழிலை நான் செய்யவில்லை. தற்போது நான் என்ன செய்து வருகிறேன் என்றால் திருப்பூரில் ரியல் எஸ்டேட் தொழிலும் பெங்களூரில் பனியன் பீஸ் விற்பனை செய்து வருகிறேன். நான் பெங்களூர் சென்று எத்தனை வருடமாகிறது என்றால் 1-1/2 ஆண்டு ஆகிறது. எனக்கு மற்ற பிரதிவாதிகளுடன் விரோதம் எதுவும் இல்லை.

3. வாதி தாக்கல் செய்த வழக்கு விவரங்களை நான் படித்துப் பார்த்தேனா என்றால் வாதி சொல்வார் நான் கேட்டுக் கொள்வேன். தாவா தாக்கல் செய்வதற்கு நானும் என் தம்பியும் வாதியின் வழக்கறிஞரை சென்று சந்தித்தோமா என்றால் என் தம்பி தான் சென்று பார்த்தார். என் தம்பிக்கும் கௌசல்யா தேவிக்கும் பிரச்சினை உள்ளதா என்றால் உள்ளது. என் தாயார் உயிருடன் இருந்தபோதே 3ம் நபருக்கு தாவாச் சொத்து வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்தது. என் அம்மா இறந்தபிறகு என் சகோதரி என் தம்பியை காலி செய்யச் சொன்னார் என்றால் சரிதான்.

4. என் சகோதரிக்கும் என் தம்பிக்கும் இடையில் சண்டை வருவதால் தாவாச் சொத்தில் இருந்தவர்கள் காலி செய்து சென்றுவிட்டார்கள் என்றால் தற்போது என் அம்மா நடத்தி வந்த கடையில் மருந்துக் கடையும், மற்றொரு பகுதியில் இந்திக்காரரும் மற்றொரு பகுதியில் என் சகோதரனும் இருந்து வருகிறார். என் சகோதரியும், சகோதரரும் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தனர் என்றால் சரிதான். என் தம்பி, என் சகோதரியையும் காவலர்கள் விசாரணை செய்தார்கள் என்றால் சரிதான். நான் அந்த விசாரணைக்கு சென்றேனா என்றால் நான் போகவில்லை. நான் தனியாக குடியிருக்கிறேன். அந்த காம்பவுண்டுக்கும் எனக்கும் சம்பந்தமில்லை.

5. என் தம்பியிடம் அவருக்கும் கௌசல்யா தேவிக்கும் உள்ள பிரச்சினையை பற்றி கேட்டபோது, என் அம்மா இறந்த பிறகு என்னை காலி செய்யச் சொல்கிறார்கள். என் அம்மா ஏற்பாடு செய்துள்ளதாக கூறுகிறார்கள். என்ன ஏற்பாடு என்று சொல்லவில்லை என்று கூறினார். பிரதிவாதிகள் என்ன எதிர்வாதம் தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் கட்டிடம் கட்டியதாக சொல்லி உள்ளேன் அந்த கட்டிடத்தை என் தாயாரும் கௌசல்யா தேவியும் கூட்டுறவு வங்கியில் கடன் பெற்று தான் கட்டினார்கள்.

6. என் தாயாரும் கௌசல்யா தேவியும் கூட்டுறவு வங்கியில் கடன் பெற்று கட்டிடத்தை கட்டி விட்டுஅந்த கடனை திருப்பிச் செலுத்தி விட்டார்களா என்றால் என் அம்மா தான் கடன் தொகையை செலுத்தினார். என் சகோதரி 4ம் பிரதிவாதி தன்

கணவருடன் தகராறு செய்து கொண்டு கார்த்திக் கருவில் இருந்த போதே என் அம்மா வீட்டுக்கு வந்துவிட்டார்கள். என் தாயாரும் கௌசல்யா தேவியும் சேர்ந்து தான் குடும்பத்தை பராமரித்து வந்தார்கள் கௌசல்யா தேவி தான் என் அம்மாவை பார்த்துக் கொண்டார் என்றால் சரியல்ல. என் அம்மா தான் கௌசல்யா தேவியை பார்த்துக் கொண்டார்.

7. கௌசல்யா தேவி கணவனை விட்டு பிரிந்து வந்துவிட்டதால் அவருக்கு ஆதரவாகத் தான் என் அம்மா அவருக்கு தாவாச் சொத்தை உயில் எழுதி வைத்துவிட்டார் என்றால் சரியல்ல. நானும், என் சகோதரர் வாதியும் நானும் என் அம்மாவை பார்த்துக் கொண்டோம் என்று சொல்வது பொய்யானது என்றால் சரியல்ல. என் அம்மாவிற்கு மருத்துவ சிகிச்சை அளித்ததற்கு ஆவணம் எதுவும் உள்ளதா என்றால் ஆவணம் எதுவும் இல்லை. கௌசல்யா தேவி தான் என் அம்மாவை பார்த்துக் கொண்டார் எல்லா ஆவணமும் அவரிடம் தான் இருக்கும். நான் பணம் கொடுத்துள்ளேன்.

8. நான் என் அம்மாவின் சிகிச்சைக்காக பணம் கொடுத்ததாக வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் அம்மா உயில் எழுதி வைத்த விவரம் தெரிந்து கொண்டே பொய்யாக வழக்காடுகிறேன் என்றால் சரியல்ல., தாவாச் சொத்து கௌசல்யா தேவிக்கு தான் பாத்தியம் என்றால் சரியல்ல. வாதி தனக்கு உரிமையில்லாத சொத்துக்கு தாக்கல் செய்த தாவா செல்லத்தக்கதல்ல என்றாலும், நான் வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

VANITHA

Digitally signed by VANITHA
Date: 2025.10.15 14:34:51 +1100

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.